**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 261/2023**

**PROSECUTION WITNESS NO.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சதாம் ஹீசைன் | **Caste** | : |
| **Father's/Husband Name** | : ஜாஹீர் ஹீசைன் | **Religion** | : **Muslim** |
| **Village** | : சக்கரப்பள்ளி, அய்யம்பேட்டை | **Calling** | : ஓட்டுநர் |
| **Taluk** | : பாபநாசம் | **Age** | : **24/2023** |

**(Accused Present.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.12.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. ர.நித்யா,** தட்டச்சர்

**C.C.No.261 /2023 20.12.2023 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.12**

**முதல் விசாரணை:**

**1.**நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கார் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 20.05.2023 ஆம் தேதி ஈஸ்வரி நகரில் இர்பான் என்பவரிடம் கார் ஓட்டுநராக வேலை செய்து கொண்டிருந்தேன். பணி முடிந்து எனது அம்மா தௌலத் பீவி என்ற பெயரில் உள்ள Honda Dream TN 68 M 0185 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு நிற இருசக்கர வாகனத்தில் பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு எதிரே உள்ள மதுபான கடைக்கு சென்றேன். அப்போது பகல் 12.00 மணியளவில் ஆஜர் எதிரி என்னிடம் பேச்சு கொடுத்தார். பின்னர் நானும் எதிரியும் எனது இரு சக்கர வாகனத்தில் கீழ வாசல் வந்து மீண்டும் மது அருந்தினோம். அப்போது எதிரி எனது இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டு சென்று விட்டார். பின்னர் 31.05.2023 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் நானும் என் அண்ணன் முகமது அலிபா இருவரும் தஞ்சாவூர் இரயிலடியில் டெலிவரிக்கு சென்று விட்டு ஆத்துபாலம் அருகே திரும்பி வரும்போது எனது காணாமல் போன Honda Dream இரு சக்கர வாகனம் Accelerator Cable அறுந்த நிலையில் நின்று கொண்டுஇருந்தது. அப்போது போலீசாருக்கு தகவல் தெரிவித்தேன். பின்னர் நானும் எனது அண்ணணும் ஆஜர் எதிரியும் கிழக்கு காவல் நிலையம் சென்று நான் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள கையெழுத்து

**C.C.No.261 /2023 20.12.2023**

என்னுடையது. (**புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ) மேற்படி புகார் மனுவை காவல் நிலையத்தில் எழுதி கொடுத்தார்கள். பின்னர் நீதிமன்றத்தில் மனு அளித்து எனது இருசக்கர வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றேன். என்னிடம் காட்டப்படும் 5 புகைபடங்களிலுள்ள இருசக்கர வாகனம் என்னுடையது. (**இருசக்கர வாகனத்திற்கு உண்டான 5 புகைபடங்கள் அ.சா. பொ. 1 ஆகவும் அதனுடன் கூடிய வட்டத்தகடு அ. சா. பொ. 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**2.**நான் வழக்கமாக வேலை முடித்து விட்டு பாஸ்போர்ட் அலுவலகம் எதிரே மதுபான கடையில் மது அருந்துவேன் என்றால் சரியல்ல. சம்பவம் அன்றுதான் மது அருந்தினேன். என் முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு தஞ்சாவூர் இரயிலடியில் டெலிவரிக்கு சென்று விட்டு ஆத்துபாலம் அருகே திரும்பி வரும்போது எனது காணாமல் போன Honda Dream இரு சக்கர வாகனம் Accelerator Cable அறுந்த நிலையில் நின்று கொண்டுஇருந்தாக எனது புகாரில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. என் முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு எதிரே உள்ள மதுபான கடைக்கு சென்ற போது . அப்போது பகல் 12.00 மணியளவில் ஆஜர் எதிரி என்னிடம் பேச்சு கொடுத்தார் என்ற விவரத்தை புகாரில் கூறியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் அ.சா. ஆ. 1 புகாரில் அவ்வாறு எழுதபடவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் கொடுத்த புகாரில் மேற்படி விவரத்தை குறிப்பிட்டேன். பாஸ்போர்ட் அலுவலத்திற்கு எதிரே உள்ள மதுபான கடையில் யாருமில்லை நானும் எதிரியும் மட்டும் இருந்தோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். ஆத்துபாலம் அருகே எனது வண்டி பற்றி போலீசாரிடம் தெரிவித்த விவரத்தை புகாரில் தெரிவித்துள்ளேன். அ.சா.ஆ. 1 புகாரில் அவ்வாறு இல்லை என்றால் சரிதான். ஆனால் நான் கொடுத்த புகாரில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். அ.சா.ஆ. 1 புகாரை யார் எழுதினார் என்றால் நான்தான் எழுதினேன். என்னுடன் எனது தாயார் காவல் நிலையம் வந்தாரா என்றால் இல்லை. போலீசார் எனது அம்மாவை அழைத்து வர சொன்னார். ஆனால் எனது அம்மா காவல் நிலையத்திற்கு போகவில்லை. என்னுடன் வந்த அண்ணனிடம் போலீசார் விசாரணை செய்து புகாரில் சாட்சி கையெழுத்து வாங்கி

**C.C.No.261/2023 20.12.2023**

கொண்டார்களா என்றால் ஆமாம். என்னுடன் எனது நண்பர் ரீஷ்வான் என்பவரும் காவல் நிலையத்திற்கு காவல் நிலையம் வந்தார். அவரிடம் போலீசார் விசாரணை செய்து புகாரில் சாட்சி கையெழுத்து வாங்கி கொண்டார்களா என்றால் ஆமாம். அ.சா.ஆ.1 புகாரில் இரு நபர்களும் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் இருவரும் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். இந்த வழக்கில் உண்மையான புகார் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக எதிரி மீது ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. உண்மையாகவே எனது வாகனம் திருடப்பட்டிருந்தால் உடனடியாக புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.